www.xtrapapers.com
www.PapaCambridge.com

O

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2008**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*0746855884*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

SP (CW/TL) T53120/2
© UCLES 2008

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

[Turn over

www.xtrapapers.com

www.PapaCambridge.com



BLANK PAGE

www.xtrapapers.com
www.PapaCambridge.com



## Section A – Translation

**1** Translate into **English**.

ஒரு பையன் தபால் அலுவலகத்தில் பொறுமை இல்லாமல் வரிசையில் நின்று கொண்டு இருந்தான். அவனுக்கு ஒரு தபால் தலை (stamp) வாங்க வேண்டி இருந்தது. பிறகு அவனுடைய அப்பா கொடுத்த கடிதத்தில் அதை ஒட்டித் தபாலில் போட வேண்டி இருந்தது. ஆனால் வரிசை மிகவும் நீளமாகவும் மெதுவாகவும் போய்க் கொண்டு இருந்தது.

அவன் அந்தக் கடிதத்தை முந்தின நாள் தபாலில் போட்டு இருக்க வேண்டும். ஆனால் நண்பர்கள் வந்த படியால் தபாலில் போட மறந்து விட்டான். அவனுடைய அப்பா அவனைக் கோபித்துக் கொண்டு, இன்றே அதைத் தபாலில் போடச் சொன்னார்.

வரிசையில் வயதானவர்களும் தாய்மார்கள் குழந்தைகளுடனும் நின்று கொண்டு இருந்தார்கள். சிலர் தங்கள் முறை வந்ததும் அதிகாரிகளிடம் பல கேள்விகள் கேட்டனர். இந்தப் பையனுக்கு மேலும் எரிச்சலாக வந்தது. கடைசியாக அவன் முறை வந்தது. பாக்கெட்டில் கையை விட்டுப் பார்த்தான். திரும்பவும் தேடினான். கடிதம் அங்கு இல்லை!

[10]

**2** Translate into **Tamil**.

The old man waited for the clock to strike two. He didn't like going to the market before this time. In the mornings, the market was full of mothers, rushing around with small children, trying to get their shopping done before picking up their older children from school.

At lunch time, local traders and office workers stopped at the stalls to pick up their lunch.

After this rush, a brief calm descended on the market in the early afternoon. At this time, the old man could shuffle around the stalls slowly. He would stop to talk to the traders he knew well, having visited many of them for well over ten years.

Many would ask after his health and his children, who were now working in big cities. Some would turn back and retrieve the best fruit and vegetables that they had set aside for him.

This was the old man's time for interacting with the world. This was the time between the solitude of morning prayers and the preparation of a simple meal in the evening from his afternoon purchases.

[20]

www.xtrapapers.com
www.PapaCambridge.com



## Section B – Reading Comprehension

Read the following passage carefully and then answer in **Tamil** the questions that follow.

**லான்ஸ் ஆம்ஸ்ட்ராங்**

லான்ஸ் ஆம்ஸ்ட்ராங் 1971 ம் ஆண்டு செப்டெம்பர் 18 ம் திகதி பிறந்தார். இவர் 1999 ம் ஆண்டு முதல் 2005 ம் ஆண்டு வரை தொடர்ந்து 7 தடவை 'டூர் டி பிரான்ஸ்' என்ற சைக்கிள் பந்தயத்தில் வெற்றி பெற்றார். இந்தப் பந்தயம் ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் 3 கிழமைகள் நடக்கும். இதில் சைக்கிள் ஓட்டுபவர்கள் பலர் பங்கு கொண்டு பிரான்ஸிலும், பிரான்ஸூக்குப் பக்கத்தில் உள்ள ஊர்கள் வழியாகவும் செல்வார்கள். லான்ஸ் ஆம்ஸ்ட்ராங்கிற்கு தொடர்ந்து கிடைத்த வெற்றி உண்மையாகவே மெச்சத் தகுந்தது. ஏனென்றால் இவருக்குப் புற்று நோய் (கான்சர்) வந்து இருந்தது. அதற்குக் கடினமான மருத்துவம் செய்த பிறகே அவர் இந்தப் பந்தயத்தில் கலந்து கொண்டார்.

ஆம்ஸ்ட்ராங் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் எல்லா விளையாட்டுகளிலும் கெட்டிக்காரராக இருந்தார். ஆனால் இளைஞராக இருக்கும் போது சைக்கிள் ஓட்டுவதில் அதிக விருப்பம் காட்டினார். அமெரிக்கா அமெச்சூர் வெற்றி இளைஞராக இருக்கும்போதே இவருக்கு 1991–ல் கிடைத்தது. *1992*ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயத்தில் பதினான்காவது இடத்தில் வந்து வெற்றி பெற்றார். *1993* ம் ஆண்டு நார்வேயில் நடந்த உலக சைக்கிள் பந்தயத்தில் முதலில் இவருக்குப் பெரிய வெற்றி கிடைத்தது. இந்த வெற்றிக்குப் பிறகு நார்வே அரசர் தன்னைப் பார்க்க வரும்படி ஒரு அழைப்புக் கொடுத்தார்.

முன்னால் பல வெற்றிகள் கிடைத்தும், 1996ம் ஆண்டு இவருக்குக் புற்றுநோய் வந்து இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. இவருக்கு நீண்ட காலம் கடினமான மருத்துவம் செய்ய வேண்டியிருந்தது. டாக்டர்கள் இவர் 40 % குறைவாகத் தான் இவர் உடம்பு சரியாகி வாழ முடியும் என்று கூறினார்கள். சில டாக்டர்கள் இதுவே அதிகம் என்றும் கூறினார்கள். மருத்துவம் செய்து கொண்டு இருக்கும் போது இவருக்கு அமெரிக்க அணியில் ஒரு இடம் கிடைத்தது. இவர் 'டூர் டி பிரான்ஸில்' வெற்றி பெற்றதை விட, புற்றுநோய் வந்து குணமானதையே பெரிதாகக் கருதுகிறார்.

உடல்நிலை குணமான பிறகு ஆம்ஸ்ட்ராங் 'லான்ஸ் ஆம்ஸ்ட்ராங் தர்ம ஸ்தாபனம்' என்று ஒரு அமைப்பை ஆரம்பித்துள்ளார். இந்த அமைப்பு கான்சர் வந்தவர்களுக்கு உதவி செய்கிறது. மற்றவர்களுக்கு இந்த நோயைப் பற்றி தெரிவிப்பதற்கும் உதவுகிறது. இந்த அமைப்பின் பணத் தேவைக்கு, மஞ்சள் நிறமுள்ள மணிக்கட்டில் அணியும் பிளாஸ்டிக் பட்டைகள் செய்து விற்றனர். இந்தப் பட்டைகளில் 'திடமாக வாழ்' என்று எழுதப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் 58 மிலியனுக்கு மேலாக மணிக்கட்டில் அணியும் பட்டைகள் விற்கப் பட்டன. இதனால் கான்சர் (புற்று நோய் பற்றி) ஆராய்ச்சி செய்வதற்கு நிறையப் பணம் கிடைத்தது. 'டூர் டி பிரான்ஸில்' வெற்றி பெற்றவர்களுக்கு மஞ்சள் நிற சட்டை கொடுப்பார்கள். அதனால் மணிக்கட்டில் அணியும் பட்டைகளையும் மஞ்சள் நிறத்திலே செய்தனர்.

ஆம்ஸ்ட்ராங் இப்பொழுது சைக்கிள் போட்டிகளில் இருந்து ஓய்வு எடுத்துக் கொண்டு இருக்கிறார். ஆனால் தன் தர்மஸ்தாபனத்திற்குப் பணம் சேகரிப்பதற்கு உலகம் முழுவதும் சைக்கிளில் சுற்றிக் கொண்டு இருக்கிறார்.

www.xtrapapers.com



www.PapaCambridge.com

Now answer the following questions in **Tamil** using your own words as much as possible.

1 "டூர் டி பிரான்ஸ்" என்றால் என்ன?

2 மறுபடியும் முதல் பத்தியைக் கவனமாகப் படிக்கவும். "டூர் டி பிரான்ஸில்" லான்ஸ் ஆம்ஸ்ட்ராங்கிற்குக் கிடைத்த வெற்றிக்கு இரண்டு காரணங்கள் என்ன? [2]

3 டூர் டி பிரான்ஸ் வெற்றிகள் தவிர வேறு என்ன சைக்கிள் வெற்றிகள் பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது? [2]

4 இந்தப் பத்திகளில் இவரின் உடல்நிலை எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டு இருக்கிறது? [2]

5 இவர் ஆரம்பித்த தர்ம ஸ்தாபனத்தின் நோக்கங்கள் என்ன? [2]

6 லான்ஸ் ஆம்ஸ்ட்ராங் எதைத் தன் வாழ்க்கையில் மிகப் பெரிதாக நினைக்கிறார்? ஏன்? [3]

7 மணிக்கட்டில் அணியும் பட்டைக்கு ஏன் இந்த நிறம் தேர்ந்தெடுக்கப் பட்டது? [2]

8 இந்தப் பத்தியில் லான்ஸ் ஆம்ஸ்ட்ராங் ஓய்வு பெற்ற பிறகு அவருடைய எதிர்காலத் திட்டங்கள் என்ன என்று தெரிவிக்கிறது? [2]

9 இதைப் படித்த பிறகு, லான்ஸ் ஆம்ஸ்ட்ராங் ஓய்வு பெற்ற பிறகு வாழ்க்கையில் முன்னேற இவருக்கு என்ன தகுதிகள் இருக்கின்றன என்று நீ நினைக்கிறாய்? [4]

[20 marks for content + 5 marks for language = 25]

www.xtrapapers.com
www.PapaCambridge.com



BLANK PAGE

BLANK PAGE

www.xtrapapers.com
www.PapaCambridge.com

www.xtrapapers.com

www.PapaCambridge.com



**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of